

முதலமைச்சர் அவர்கள் 11.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், பொது நூலக இயக்ககத்தின்கீழ், ரூ.84.76 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடங்களையும் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் ரூ.32.64 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்களையும் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி ஊராட்சி ஒன்றியம், அம்மாபட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆண்கள் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் கலந்து கொண்டார். உடன் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் ச.சிவக்குமார், மாவட்ட கல்வி அலுவலர் (அறந்தாங்கி) திருமதி.கலாராணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கத்தக்குறிச்சி ஊராட்சியில், ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள உலர் கலத்துடன் கூடிய தரம் பிரிப்புக் கூடம் கட்டுமானப் பணியினை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 10.04.2025 அன்று அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) திருமதி.ரா.ஜெகதீஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் உறுதி மொழி!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், ஏப். 14-

பெரம்பலூர் மாவட்டத்தில் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட கழக அலுவலகத்தில் அவரது உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்கப்படுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனையின் பேரில்,

பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சமத்துவ நாளாக கொண்டாடப்பட உள்ளது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் எனது தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் முன்னிலையில், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், நாளை 14.04.2025( திங்கட்கிழமை) காலை 10.00 மணிக்கு, அம்பேத்கர் அவர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, உறுதிமொழி ஏற்கப்படவுள்ளது.

அது சமயம் மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்ட கழகம் காட்டூர் பகுதி கழகம் சார்பில் முதல்வர் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு காட்டூர் பகுதி கழக செயலாளர் நீலமேகம் தலைமை வகித்தார். தமிழ்மணி வரவேற்றார். திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அமைச்சர் ஆவடி சாமு நாசர் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில்

# ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. – நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

கிருஷ்ணகிரி, ஏப். 14-

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதி, போச்சம்பள்ளியில் கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில், இந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி விளைவிக்கின்ற மத்திய அரசை கண்டித்து பொதுக் கூட்டம் நடைபெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ்ராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன் வரவேற்புரை ஆற்றினார்

ஒன்றிய செயலாளர்கள் சாந்தமூர்த்தி ,மகேந்திரன் , அறிஞர், பேரூர் கழக செயலாளர் தம்பிதுரை, பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சத்திய மூர்த்தி, மகேந்திரன், லயோலா ராஜசேகர், சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருமான மதியழகன், திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில்சம்பத், கழக இளம் பேச்சாளர் முரளிகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது நாஞ்சில் சம்பத் பேசும்போது

தமிழ்நாட்டில் இந்திக்காக பல பேர் தங்களுடைய இன்னுயிரை கொடுத்து தமிழுக்காக வாழ்ந்து விட்டு சென்றார்கள் ஆனால் தற்போது உள்ள ஒன்றிய பாசிச அரசு தமிழகத்தில் வேண்டுமென்றே இந்தியை திணிக்க முயற்சி செய்கிறது

தமிழ்நாட்டிற்கு வருகை தந்த பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய நிலுவை தொகையை விடுவிக்கிறேன் என சொன்னாரா என கேள்வி எழுப்பிய அவர் மோடி தமிழ்நாட்டில் அரசியல் செய்கிறார், ஆனால் திமுக தமிழ்நாட்டில் அரசியல் செய்யவில்லை மாறாக தமிழ்நாட்டிற்கு திமுக என்றும் தமிழக மக்களுக்காக துணை நிற்கிறது தமிழ்நாட்டில் பாஜக திமுக.,வுக்கு எதிரி கிடையாது, ஏனென்றால் பாஜக தமிழ்நாட்டில் உயிரோடு இல்லை இருப்பதைப் போல் காட்டிக் கொள்கின்றனர். தாமரை முளைக்கும், தாமரை மலரும் என கூறுகிறார்கள் ஆனால் தமிழ்நாட்டில் தாமரை மலராது என்றும், ஏனென்றால் ஏற்கனவே இங்கு தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது என்று நகைச்சுவையாக பேசினார். தாமரை தண்ணீரில் தான் மலரக்கூடிய குணம் கொண்டது. ஆனால் தாமரை இலை மேல் தண்ணீர் ஊற்றினால் அந்த இலை தண்ணீரை நிராகரித்து விடும் என்றும், தன்னை தாங்கும் தண்ணீரை நிராகரிக்கும் தாமரையை தமிழக மக்கள் நிராகரிப்பார்கள் என்றார்.

ஏற்கனவே பாஜக அரசியல் செய்து அதிமுகவை நான்காக பிரித்து விட்டது. எடப்பாடி பழனிச்சாமி ஒரு இடைத்தரகர் அவர் கால்களை தேடி பயணிக்கிறார். ஒரு ஊர்வனப் போல மேசைக்கடியில் பயணித்து சசிகலா காலில் விழுந்தார். ஆனால் சசிகலா அவரை சரியாக அடையாளம் காணாமல் முதலமைச்சராக்கினார். எடப்பாடி பழனிச்சாமி சசிகலாவுக்கும் விசுவாசமாக இல்லை, சிறைக்கு சென்ற அவரை சித்திர வதை செய்தார். தன்னை உருவாக்கியவரின் அரசியல் வாழ்க்கையை முடித்துவிட்டார் என்றார்.

கூட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன் பொருளாளர் கதிரவன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், கோதண்டன், ஒன்றிய செயலாளர் கோவிந்தன் குண.வசந்தரசு ,ரஜினி செல்வம் மற்றும் மாவட்ட, ஒன்றிய ,நகர , பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் ,தலைவர்கள், துணை த்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் கிளைக் கழக செயலாளர்கள் முன்னாள் இந்நாள் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், BLA 2,BLC சார்ந்த தோழர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கண்டன பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர் முடிவில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர் நன்றியுரை ஆற்றினார்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர் முகமது, கோவி.அய்யாராசு, எஸ்.நடராஜன், தொகுதி மேற்பார்வையாளர் கு.க.மறைமலை, மாநகரக் கழகச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் உள்ளனர்.



தமிழக ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசின் சார்பில் தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியதை வரவேற்று ஈரோடு தெற்கு மாவட்டம் சார்பில் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் தலைமையில் ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. மேலும் வீரப்பன்சத்திரம் பகுதி, சூரம்பட்டி பகுதி, சூரியம்பாளையம் பகுதி கழகங்களின் சார்பில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் மு.சுப்பிரமணியம், ஆ.செந்தில்குமார், ப.க.பழனிச்சாமி, வி.செல்வராஜ், வி.சி.நடராஜன், பொ.ராமச்சந்திரன், எஸ். குமாரவடிவேல், வில்லரசம்பட்டி முருகேசன், இளைஞரணி ஜெ.திருவாசகம், மாணவரணி ஸ்ரீதர் பொன்னுசாமி, ஜெகநாதன், தண்டபாணி ஜாபர் சாதிக், ஜீவா, குத்தூஸ் ஜீயாவுதீன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில்

# அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. அறிக்கை!



தருமபுரி, ஏப். 14-

தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தருமபுரி கிழக்கு மாவட்ட திமுகழகம் சார்பில் வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி சமத்துவ நாள் அன்று காலை 9.00 மணி அளவில் தருமபுரி தலைமை அரசு மருத்துவமனை அருகில் உள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது அதனை தொடர்ந்து 9.30 மணி அளவில் தருமபுரி மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, "சமத்துவநாள் உறுதிமொழி" ஏற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அது சமயம் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர,பேரூர்,ஊராட்சி கிளை,வார்டு கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் தலைவர்கள்,துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சைதை 172 ‘அ’ வட்டத்தில் பட்டாசு வெடித்து இனிப்பு!

சென்னை, ஏப். 13 -

உச்சநீதிமன்ற தீர்ப்பை வரவேற்று மாவட்டச் செயலாளர் மருத்துவ மற்றும் மக்கள் நல வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், ஆலோசனைப்படி பகுதி கழகச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. அறிவுறுத்தின்படி 9-4-2025 காலை 9 மணி மணி அளவில் 172 அ வட்டக் கழகம் சார்பில் வட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர்.செந்தில் தலைமையில் ஐந்து பர்லாங் சாலை பேருந்து நிலையத்தில் பட்டாசு வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதில் மாவட்ட பிரதிநிதி வி.ரமேஷ்குமார், மடுவை பி, பிரகாஷ், பகுதி பிரதிநிதி ஏ.சக்திவேல். எம். நாராயணமூர்த்தி. ஆர். சீனிவாசன், கே..கே. மோகன், வட்ட செயற்குழு உறுப்பினர் எஸ். ரவீந்தர். கே சுகுமார், காமராஜபுரம் லிங்கப்பன், இ.சுரேஷ், ராஜாங்கத் தங்கமணி, இபி திருவேங்கடம், ,ராஜாராம் நாராயணன், பிள்ளையார் கோயில் தெரு லோகு, நிர்வாகிகள் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



பல்கலைக்கழகத்தின் வேந்தர் மாநிலத்தின் முதலமைச்சர் தான் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பு வழங்கியது அடுத்து சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவரணி சார்பில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர். சீனிவாசன் அப்பாதுரை தலைமையில் கல்லூரி மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மகேஸ்வரன், கிஷோர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு பிரஸ் அண்ட் மீடியா ரிப்போர்டர்ஸ் யூனியனின் மாநில துணை செயலாளர் மற்றும் மதிமுக முன்னாள் நகர செயலாளர் இமயம் ஜெயராம் உடல் நலக்குறைவால் ஓய்வில் இருப்பதை அறிந்த, அமைப்பின் மாநில தலைவர் டாக்டர் மு. சிவ தமிழவன், ஜெயராமனின் இல்லம் சென்று உடல்நலம் விசாரித்தார். உடன் விருத்தாசலம் ம.தி.மு.க. நிர்வாகி தடயம் பாபு , மாவட்ட திமுக இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன், திருவாரூர் நியூ பாரத் பள்ளி நிர்வாகி முரளிதரன் மற்றும் பன்னாட்டு சமூக சேவகரும் இந்திய மக்கள் மன்றத்தின் செய்தி தொடர்பு அதிகாரி ஏ. வி.சி.கார்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்